**தேசிய வீதி வலையமைப்பின் நிலச்சரிவு இடர் பாதுகாப்பு செயற்திட்டம் - 2015**

---

தேசிய வீதி வலையமைப்பின் நிலச்சரிவு இடர் பாதுகாப்பு செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல் - பி 109 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, ஊவா மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களில் உயர் நிலப்பகுதிகளில் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுலாக்குவதன் மூலம் அடிப்படை உட்கட்டமைப்பாக ஏ – வகுப்பு தேசிய வீதிகளை இலக்காகக்கொண்ட நிலச்சரிவு இடரை குறைப்பதற்கும் அதன் மூலம் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி என்பவற்றிற்கு பங்களித்து வீதி வலையமைப்புப் பாதுகாப்பினை முன்னேற்றி வீதிப் பாவனையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களை உள்ளடக்கிய மக்களின் வாழ்வாதரத்தை பாதுகாத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 16,201 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 9,591 மில்லியனானதுடன் அதில் ரூபா 12,870 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 7,619 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 யூலை 05 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப்

பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமா்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளா் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடா்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவா் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசாா் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடா்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசாா் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆலோசனையாளர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 7.83 மில்லியன் தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 7,619 | 12,870 | 350 | 286.62 | 349.85 | 428.90 | 527.79 |
| இலங்கை அரசாங்கம் | 1,972 | 3,331 | 100 | 38.03 | 46.42 | 62.77 | 76.62 |
| **மொத்தம்** | **9,591** | **16,201** | **450** | **324.65** | **396.27** | **491.67** | **604.41** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்ட கடனில் ரூபா 09 மில்லியன் ஒதுக்கீடு செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவாதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கடனை திருப்பிச் செலுத்துவது தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்காக விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயலாளரின் 2013 யூலை 03 இன் எம்பிஎச்/எச்டபிள்யூவை/ஏசீசீ/03/03/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பிற்காக மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 100 மில்லியன் தொகையான ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 46.42 மில்லியன் தொகை மாத்திரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது,

## 3.2 பௌதீகச் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலக்கிடப்பட்ட தேசிய வீதிகள் மீதான நிலச்சரிவு அனர்த்த இடர்களை குறைப்பதற்கான விபரமான வடிவமைப்பு 2015 செப்தெம்பர் அளவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதும் விபரமான வடிவமைப்புக்கள் மீதான அறிக்கை 05 மாதங்கள் காலதாமதத்துடன் 2016 பெப்ரவரியில் ஆலோசனையாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, 2016 செப்தெம்பரில் பூர்த்தியாக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்வதற்காக பிரயோகிக்கப்பட்ட கேள்விகோரல் செய்முறைகள் 2016 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு 86 சதவீதமான முன்னேற்றத்தை மாத்திரம் காட்டியிருந்தது. திருத்தப்பட்ட கேள்விகோரல் பொதிகளிற்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் அனுமதி காலதாமதத்துடன் பெறப்பட்டமையால் காலரீதியில் ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட முடிந்திருக்கவில்லை என செயற்திட்டப் பணிப்பாளரால் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கண்டி, பதுளை, நுவரெலியா, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களிலுள்ள 30 நிலையங்களில் முன்னெச்சரிக்கை முறைமையை ஸ்தாபிப்பது 2015 நவம்பரில் பூர்த்திசெய்வதற்கு பட்டியலிட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 62 சதவீதமான வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், உரிய வேலைகளானது 06 மாதங்கள் காலதாமதத்துடன் 2016 மே இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன என செயற்திட்டம் அறிக்கையிட்டிருந்தது.

### 3.3 நிதிக் கட்டுப்பாடு மீதான விடயங்கள்

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்திட்டத்தால் நிலையான சொத்துக்களின் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால்அனுமதிக்கப்பட்டிருந்த செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவில் 34 பதவியணி நிலைமைகள் காணப்பட்டதுடன் அதில் 13 பதவிகள் மாத்திரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிரப்பப்பட்டிருந்தது. செயற்திட்ட பொறியியலாளர், 02 ஜீஈஓ தொழில்நுட்ப பொறியியலாளர்கள மற்றும் 09 தொழில்நுட்ப அலுவலர்கள் போன்ற முக்கிய பதவிகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு மேலாக வெற்றிடம் நிலவியிருந்ததுடன் இது செயற்திட்ட நடவடிக்கைகளின் சுமூகமான செயற்பாடுகளிற்காக செல்வாக்கு செலுத்தியிருந்தது. மேலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டிருக்காத ஆலோசனையாளர் பதவிக்காக நபரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் வாகனப் படிகளாக ரூபா 630,410 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திற்கான ஆலோசனையாளரின் சேவைகளின் பங்களிப்பை நிரூபிப்பதற்கு செயற்திட்ட வேலைகள் தொடர்பான நாளாந்த வருகைப் பதிவேடுகள், வேலை ஒதுக்கீடுகள் மற்றும் செய்யப்பட்ட வேலைப் பதிவேடுகள் போன்றவற்றிக்கான சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.